DW Made for minds.

# நடத்தை விதிகள்

நம் மதிப்புகள். நம் அணுகுமுறை. நம் செயல்கள்.

# நம் மதிப்புகளைப் பின்பற்றுவது



அன்புள்ள ஊழியர்களுக்கு,

டாய்ச்ச வெல்ல(DW) ஒரு சுதந்திரமான குரலாகவும், அதிக நம்பகத்தன்மை கொண்ட ஊடகமாகவும், முன்பு எப்போதும் இல்லாத அளவிற்கு அதிக மக்களிடையே சென்று சேர்கிறது. குறிப்பாக தணிக்கை மற்றும் பிராசத்திற்கு உட்பட்ட மற்றும் மாற்று கண்ணோட்டங்களுக்கு இடமில்லாத பகுதிகளில் வாழும் மக்களுக்கு, தகவல் சென்று சேர வேண்டும் என்பதே நம் நோக்கம். இங்குதான் நாமும் சர்ச்சைக்குரிய நிலைபாடுகளை முன்வைக்கிறோம்.



**உலகம் முழுக்க மக்களுக்கு தகவல் சென்று சேரவும், பேச்சு சுதந்திரத்தையும் நாம் ஊக்குவிக்கிறோம்.**

DW-ல் அனைவருக்கும் ஒரே பொதுவான நோக்கம்தான்: சுதந்திரம், மனித உரிமைகளை நிலைநிறுத்துதல், உயர் நெறிமுறை தரநிலைகள், ஜனநாயகம் மற்றும் சட்டத்தின் ஆட்சி, திறந்த மனப்பான்மை, சகிப்புத்தன்மை மற்றும் பொதுமக்களிடம் வெளிப்படைத்தன்மையுடன் இருப்பது. அதனால்தான் பாலியல் பாகுபாடு, இன பாகுபாடு மற்றும் யூத எதிர்ப்பு போக்கு உள்ளிட்ட அனைத்து வகையான பாகுபாடுகளையும் நாம் நிராகரிக்கிறோம். இஸ்ரேல் நாட்டின் உரிமையை நாம் ஆதரிக்க, யூத படுகொலையில் ஜெர்மனிக்கு இருக்கும் வரலாற்று பொறுப்பும் ஒரு காரணம். இந்த மதிப்புகளை எப்போதும் நாம் பின்பற்றுவோம். இது நாம் வழங்கும் ஊடக செய்திகளில் மற்றும் DW அகாடமி வழங்கும் கொள்கை, கல்வி திட்டங்களில் மட்டும் பிரதிபலிக்கவில்லை, 160க்கும் மேற்பட்ட நாட்டு மக்களிடம் தினசரி உரையாடும் போதும் இதனை நாம் பின்பற்றுகிறோம்.

ஒரு பொது ஆணையுடன், உலகளவில் இயங்கும் ஊடக நிறுவனமான DWவிற்கு பயனர்கள், திட்டங்கள், விற்பனை மற்றும் வணிக கூட்டாளிகள், சமூகம் மற்றும் சுற்றுச்சூழல் குறித்து சிறப்பான பொறுப்பு இருக்கிறது. அலுவலகத்திற்கு உள்ளேயும் வெளியேயும் இந்த பொறுப்பை நாம் எப்படி உணர வேண்டும் என்பதை இந்த நடத்தை விதிகள் விவரிக்கின்றன.

DWவிலும் மற்றும் நாம் ஒத்துழைக்கும் கூட்டாளி நிறுவனங்கள் என இரு தரப்பிலும் இருந்தும், இந்த மதிப்புகள் மற்றும் கொள்கைகள், விதிமுறைகள் மற்றும் தரநிலைகளை உலகம் முழுவதும் நடைமுறைப்படுத்துகிறோம். இது நம் நடத்தை விதிகளில் சேர்க்கப்பட்டுள்ளது.

பிணைப்புக் கொள்கைகள் மற்றும் நம் தினசரி நடவடிக்கைகளை வழிநடத்தும் மற்றும் நாம் ஒருவொருக்கு ஒருவர் இடையே எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதற்கான தரநிலைகளை, மேலோட்டமாக இந்த நடத்தை விதிகள் விவரிக்கின்றன. நாம் செய்யும் ஒவ்வொரு செயல்களிலும் இந்த விதிகளை பின்பற்றுவது அவசியம். நம் நடவடிக்கைகள் சட்டப்படியாகவும், DW ஊழியர்களின் நடத்தையும் சட்டத்திற்கு

உட்பட்டு, நம் வணிக நடைமுறைகள் நெறிமுறை ரீதியாக கண்டிக்க முடியாதவையாக இருக்கும் என்பதை நடத்தை விதிகள் உறுதி செய்கின்றன.

மேலும் அடிப்படை கோட்பாடான DW தலைமைத்துவ மதிப்புகள் இப்போது நிறுவனம் முழுவதும் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. ஜெர்மனியிலும், உலகம் முழுக்கவும், நம் மரியாதை மற்றும் வெற்றியை பராமரிக்க இந்த நடத்தை விதிகள் அவசியம். DWவின் பணியை நிறைவேற்ற நினைக்கும் அனைவருக்கும் இந்த கொள்கைகள் மற்றும் ஏற்கனவே இருக்கும் ஒழுங்குமுறைகளின் முக்கியத்துவத்தை கூறவும், அதனை பின்பற்றுவதன் முக்கியத்துவத்தை உணர்த்துவதுமே நடத்தை விதிகளின் நோக்கம். டாயச்ச வெல்ல மற்றும் அதன் துணை நிறுவனங்களில் பணிபுரியும் அனைத்து ஊழியர்களுக்கும் இந்த நடத்தை விதிகள் பொருந்தும்.

நடத்தை விதிகள் மற்றும் வழிகாட்டுதல்களை பின்பற்ற வேண்டிய கடமை DW ஊழியர்களான நம் அனைவருக்கும் இருக்கிறது. இது குறிப்பாக நிறுவனத்தின் மேலாண்மை மற்றும் அதன் பெறுநிறுவன கலாசாரத்தை வடிவமைக்கும் நிர்வாகிகளுக்கும் பொருந்தும். மேலாளர்கள் பிறருக்கு முன்மாதிரிகளாக இருக்க வேண்டும். தங்களுக்கு கீழ் பணிபுரியும் ஊழியர்களுக்கு இந்த நடத்தை விதிகள் தெரிந்திருக்கிறதா மற்றும் புரிந்திருக்கிறதா என்பதை அவர்கள் உறுதி செய்ய வேண்டும். யாரேனும் இந்த நடத்தை விதிகள், வழிமுறைகள் அல்லது அடிப்படை கொள்கைகளுக்கு எதிராக நடந்து கொண்டால் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கும் கூடுதல் பொறுப்பும் மேலாளர்களுக்கு உண்டு.

குறிப்பாக தொழிலாளர் சட்டத்தின் அடிப்படையில், நடத்தை விதிகளுக்கு எதிராக நடந்து கொள்பவர்கள் மீது விசாரணை நடத்தப்பட்டு, தேவைப்பட்டால் தக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும். உலகம் முழுவதும் பேச்சு சுதந்திரம் மற்றும் கருத்து சுதந்திரத்தை ஆதரிக்கும் ஊடக நிறுவனம் என்ற அடிப்படையில், நியாயமான வேறுபாடுகளுக்கு நாங்கள் இடமளிக்கிறோம்.

உங்கள்,
**பீட்டர் லிம்போர்க்**
பொது இயக்குனர்

**“நாம் அனைவரும் பொதுவான ஒரு சிந்தனையை பகிர்கிறோம்.**

# நடத்தை விதிகள்

அனைத்து சட்டங்கள், கூட்டு ஒப்பந்தங்கள் மற்றும் DWவிற்கு பொருந்தும் DWவின் உள் விதிமு-றைகள் ஆகியவற்றை அடிப்ப-டையாக கொண்டு நடத்தை விதிகள் அமைக்கப்பட்டுள்ளன; குறிப்பாக DW கையேட்டில் கூறப்பட்டுள்ளவையும் இதில் அடங்கும். இந்த விதிகள் மற்றும் நடத்தை விதிமுறைகள், நிச்சயம் நடத்தை விதிகளுக்கு கீழ் பொருந்துவது தொடரும். இந்நிறுவனத்தின் ஊழியர்க-ளாக இந்த விதிகளை பற்றி தெரிந்து கொள்ளும் கடமை நமக்கு இருக்கிறது. குறிப்பிட்ட விதிகள் மற்றும் விதிமுறைகள் குறித்த கேள்விகளை, மேலாள-ர்கள், அந்தந்த செயல்பாடு பற்றி தெரிந்தவர்கள் மற்றும் இணக்க அதிகாரிகளிடம் கேட்டு தெரிந்து கொள்ளலாம்.

# எது நம்மை வேறுபடுத்துகிறது

### நம் சிந்தனை – சுதந்திர மனங்களுக்கான பக்கசார்பற்ற தகவல்

நம் நோக்கம்: பக்கசார்பற்ற, ஜெர்மானிய ஊடக நிறுவனமாக, நாம் உலகம் முழுவதிலும் உள்ள மக்களுக்கு செய்திகள் மற்றும் தகவல்களை கொண்டு சேர்த்து, அதை வைத்து அவர்கள் எந்த மாதிரியான முடிவுகளையும் எடுக்கும் சுதந்திரத்தை நாம் வழங்குகிறோம்.

Made for Minds என்பதே நம் கொள்கை. நம் பயனர்கள் மற்றும் கூட்டாளிகளுடன் உரையாடு-ம்போது, உலகம் முழுவதும் மக்களுக்கு, நம்பகமான தகவல்க-ளின் அடிப்படையில் புதிய சிந்தனைகளை முன்வைக்கி-றோம். அதே நேரத்தில், கற்றலு-க்கான கருவிகளையும் மக்களுக்கு இலவசமாக வழங்கு-கிறோம். மக்கள் தங்கள் கருத்து-களை சுதந்திரமாகவும், தன்னிச்சையாகவும் வெளிப்படு-த்த உதவி, திறந்த ஜனநாயக சமூகங்களை ஒருசேர வடிவமைக்கிறோம்.

இவை நாம் அறிவித்துள்ள இலக்குகள். ஆனால், இதனை எவ்வாறு அடையப் போகிறோம் என்பதற்கான அணுகுமுறையும் முக்கியம்: தெளிவான மதிப்பு-களை நாம் பகிர்ந்து கொள்வதோடு, நம் மீதே நாம் தெளிவான எதிர்பார்ப்புகளை வைத்திருக்கிறோம். மேலும் நாம் ஒவ்வொருவருக்கு இடையே எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதற்கான வழிமுறைகளும் இருக்கின்றன. இவை நம் அனைத்து சேவைகளுக்கும் பொருந்தும், மேலும் நம் தினசரி முடிவுகள் மற்றும் நடத்தைகளை-யும் தீர்மானிக்கும்.

### சுதந்திரத்திற்கான தெளிவான அர்ப்பணிப்பு

சுதந்திரம், ஜனநாயகம் மற்றும் மனித உரிமைகள், இவை மூன்றும் நம் பத்திரிகை மற்றும் மேம்பாட்டு செய்தி, சுயவிவர-த்தின் மூலக்கூறுகள் ஆகும். உலகின் எந்தப் பகுதியிலும் சுயாதீனமாக, தெளிவான பொறு-ப்புகள் கொண்டு, சுதந்திரத்தின்

பொறுப்பை நாம் ஆதரிக்கிறோம். பாலியல் பாகுபாடு, இன பாகுபாடு மற்றும் யூத எதிர்ப்பு போக்கு உள்ளிட்ட அனைத்து வகையான பாகுபாடுகளையும் நாம் நிராகரிக்கிறோம். ஜெர்மனியின் வரலாறு காரணமாக, இஸ்ரேல் மீது நமக்கு சிறப்பு கடமை இருக்கிறது.

### திறந்த உரையாடல், உலகளவிலான நெட்வர்க்

நம் பத்திரிகை சேவைகள் மற்றும் DW அகாடமி ஆகிய இரண்டிலும் மக்களின் நிதர்சன வாழ்க்கை மற்றும் அவர்களின் தேவைகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகின்றன. உலகளாவிய மற்றும் பிராந்திய நெட்வர்க்குகளின் உதவியோடு நாம் உலகம் முழுவதிலும் உள்ள மக்களிடம் திறந்த மனதுடன் உரையாடுகிறோம். எப்போது, எங்கு தேவைப்படுகிறதோ, நம் தயாரிப்புகள் மற்றும் சேவைகள், மக்களுக்கு புதிய பார்வைகளை வழங்குகின்றன. ஆக்கப்பூர்வமான பரிமாற்றத்தை ஆதரிக்கும் நாம், அனைத்து மக்களையும் எப்போதும் எங்கும் மரியாதையுடன் நடத்துகிறோம்.

### ஆழ்ந்த அறிவு, பலதரப்பட்ட பார்வைகள்

நம் பன்முகத்தன்மை மற்றும் நிபுணத்துவம் ஆகிய இரண்டும் நம் மிகப்பெரிய சொத்துகள்.

> “பரஸ்பர வெற்றியைப் பெறுவதற்காக நாங்கள் எங்கள் **சிந்தனைகளை பகிர்ந்து, பன்முகத்தன்மையையும் பயன்படுத்துகிறோம்.**

ஆர்வத்துடன் உலகை அணுகும் நாம், புதிய பாதைகளை தைரியமாக எடுப்பதோடு, முக்கிய கேள்விகளை கேட்டு, ஆதாரப்பூர்வமான, சுயாதீனமான பதில்களையும் வழங்குகிறோம். உலகின் 160க்கும் மேற்பட்ட நாடுகளில் இருந்து, நம் பன்மொழி சேவைகள், நம் பயனர்கள் மற்றும் கூட்டாளிகளுடன் சேர்ந்து கவர்ச்சிகரமான விஷயங்களை சிறந்த தரத்தில் வழங்குகின்றன. சுதந்திர ஊடக அமைப்புகளின் மேம்பாட்டை ஊக்குவிக்கும் நாம், அனைவரும் தகவல்களை அணுகும் முறையிலும், கல்வி மற்றும் சுதந்திர பத்திரிகைகளுக்கான தரநிலையை அமைத்துள்ளோம். நாம் பரஸ்பர வெற்றி அடைய, நம் யோசனைகளை பகிர்ந்து, நம் பன்முகத்தன்மையை பயன்படுத்துகிறோம்.

இந்த மதிப்புகளே, நம் நடத்தை விதிகளின் அடிப்படையை அமைக்கிறது – தயாரிப்பிற்கான ஒத்துழைப்பு மற்றும் பரஸ்பர மரியாதையை உறுதி செய்கிறது.

# சட்டம் மற்றும் ஒழுங்குமுறையை நாம் கடைபிடிப்பது

நடத்தை விதிகளில் கூறப்பட்டுள்ள வழிமுறைகள், DWவிற்கு உள்ளே நடக்கும் பொதுவான உரையாடல்களையும், மற்றும் நம் தினசரி பணிக்கான மதிப்புகளையும் கோடிட்டு காட்டுகிறது. இது செய்தி வழங்குதலுக்கும் பொருந்தும். பொருந்தக்கூடிய சட்டங்கள் மற்றும் நிறுவனம் சார்ந்த விதிமுறைகளும் நிச்சயம் நடத்தை விதிகளின் கீழ் தொடர்ந்து பொருந்தும்.

எனவே, மேலாண்மை அதிகாரிகள் மற்றும் நிர்வாகிகள் முன்மாதிரியாக இருந்து, இந்த நடத்தை விதிகளுக்கு இணங்கி செயல்பட்டு, இதற்கு பங்களிக்க கடமைப்பட்டுள்ளனர்.

ஊழியர்கள் பின்வரும் விஷயங்களில் சிறப்பு கவனம் செலுத்த வேண்டும் என்று DW எதிர்பார்க்கிறது; விதிமீறல்கள் இருந்தால், தொழிலாளர் சட்டத்தின் அடிப்படையில் நடவடிக்கைகள் எடுக்கப்படலாம்.

### சமமாக நடத்துதல் பொது சட்டப்படி பாகுபாட்டிற்கு தடை (Allgemeines Gleichbehandlungsgesetz (AGG))

பாலியல் பாகுபாடு, இன பாகுபாடு, யூத எதிர்ப்பு போக்கு போன்ற எந்த வகையான பாகுபாடும், AGG சட்டப்படி சகித்துக் கொள்ளப்படாது. இது ஒருவருக்கு ஒருவர் எப்படி நடத்தப்படுகிறார்கள் மற்றும் செய்தி வழங்குதலுக்கும் பொருந்தும். யூத எதிர்ப்பு போக்கு அல்லது இனவெறிக்கு இடமில்லாத நேரத்தில், இனப் பாரம்பரியம், பாலினம், மதம், உலகக் கண்ணோட்டம், இயலாமை, வயது, பாலியல் அடையாளம் போன்ற எதன் அடிப்படையிலும் ஊழியர்கள் அல்லது வணிகத்தில் ஈடுபடும் பிற கூட்டாளிகளுக்கு எந்த பாதகத்தையும் நாம் ஏற்படுத்த மாட்டோம். துன்புறுத்தல் மற்றும் பாலியல் துன்புறுத்தல்கள் ஆகியவை ஏற்றுக்

கொள்ளப்படமாட்டாது. குறிப்பிட்ட நபர்களை அவமானப்படுத்துவது மற்றும் தவறான குற்றச்சாட்டு-களை பரப்புவதும் தடை செய்யப்பட்டுள்ளது.

இன வெறுப்பை தூண்டுவது அல்லது யூத படுகொலையை மறுப்பது போன்ற சட்டவிரோத நடவடிக்கைளும் சகித்துக் கொள்ளப்படாது.

### கருத்து சுதந்திரத்தின் வரம்புகள்

பிறரை கேளி செய்வது, பாலியல் துன்புறுத்தல், அவதூறு பரப்புவது போன்ற அவமதிப்பு நடத்தைகள், கருத்து சுதந்திரத்திற்குள் வராது என்பதை நாம் அறிந்திருக்கிறோம்.

யூத படுகொலையை மறுப்பது அல்லது அதற்கு சார்பு நிலை எடுப்பதும் கருத்து சுதந்திரத்தி-ற்குள் வராது என்பதையும் நாம் அறிவோம்.

**“ ஒருவரையொ-ருவர் சமமாக நடத்து-வதிலும் அல்லது நாங்கள் வழங்கும் செய்திகளிலும் எவ்வித பாகுபாடும் பொறுத்துக் கொள்ள-ப்படாது.**

DW ஊழியர்களாக தொழில்மு-றையாகவோ அல்லது தனிப்பட்ட விதத்திலோ சமூக ஊடகங்கள் மற்றும் பிற தளங்களில் ஒரு சில கட்டுப்பாடுகளை கடைபிடிக்க நாம் கடமைப்பட்டுள்ளோம். DWவின் மதிப்புகள் மீதான நம் பொறுப்பு, நம் வேலை, ஒரு முதலாளியாக-வும் மற்றும் வேலை ஒப்பந்தத்தில் கூறப்பட்டுள்ளப்படி பிற ஊழியர்க-ளுக்காகவும் இந்தக் கட்டுப்பாடு-களை கடைபிடிப்பது அவசியமாகும். சமூகத்தில் நமக்கு இருக்கும் இடம் மற்றும் களத்தில் நாம் செய்யும் பணி இரண்டையும் கருத்தில் எடுத்துக் கொண்டு பொது இடங்களில், DWவின் மதிப்புகளுக்கு எதிராக நடந்து கொள்ளாமல் இருப்பதை உறுதி செய்வதும் நம் கடமையாகும். எப்போதும், எந்த சூழலிலும் பாலியல் பாகுபாடு, இன பாகுபாடு, மற்றும் யூத எதிர்ப்பு போக்குக்கு ஆதரவாக கருத்துகள் வெளியிடுவதை தவிர்க்க வேண்டும். இவ்வாறு கருத்துகள் தெரிவிப்பது, தொழிலாளர் சட்டத்தின் கீழ் பணி நீக்கம் செய்யப்படுவது உள்ளிட்ட பிற விளைவுகளை ஏற்படுத்தலாம்.

DW ஊழியர்களாக, அடிப்படை விதிகள், கூட்டு ஒப்பந்தங்கள், DWவின் உள் கட்டளைகள், குறிப்பாக DW கையேட்டில் நம் துறை சார்ந்து விவரிக்கப்பட்டுள்ள ஒழுங்குமுறைகள் ஆகியவற்றை தெரிந்து வைத்துக் கொண்டு, அதனை பின்பற்றுகிறோம். இந்த ஒழுங்குமுறைகள் தொடர்ந்து பொருந்தும். இது நடத்தை விதிகளால் எந்த மாற்றத்தையும் சந்திக்காது.

# நம் ஒருவொருக்கு ஒருவர் நடந்து கொள்ளும் முறை

### மரியாதை

நேர்மை மற்றும் மரியாதையுடன் நாம் அனைவரும் சேர்ந்து பணியாற்றுவோம்.

ஒருவரின் நாடு, பாலினம், மதம், இனம் அல்லது இயலாமை, வயது அல்லது பாலியல் அடையாளம் போன்ற எதையும் பொருட்படுத்தாது அனைவரை-யும் ஒரே மாதிரியாக மதிப்போம்.

கருத்து வேறுபாடுகளுக்கு மதிப்பு கொடுப்போம்.

பணியிடத்தில் பாலியல் துன்புறு-த்தல் என்பது எந்த வகையிலும் சகித்துக் கொள்ளப்படாது.

எந்த வகையிலும் அதிகார துஷ்பிரயோகத்தை பொறுத்து-க் கொள்ள மாட்டோம்.

> “ நாங்கள் வெளி-ப்படைத்தன்மை உடனும், நம்பக-த்தன்மை உடனும் இருக்கிறோம்.

### வெளிப்படைத்தன்மை மற்றும் ஒத்துழைப்பு

வெளிப்படையாகவும், உடனடியா-கவும் தகவலை நாம் பகிர்ந்து கொள்வோம்.

வெவ்வேறு பகுதிகள், வெவ்வேறு துறைகள் மற்றும் வணிக ரீதியாகவும் ஒன்றிணைந்து பணிபுரிவோம்.

புதிய சிந்தனைகள் மற்றும் கண்டுபிடிப்புகளை ஏற்றுக் கொள்ள நாம் எப்போதும் தயாராக இருப்போம். மதிப்பு, வெளிப்படைத்தன்மை மற்றும் ஒத்துழைப்பு, நம்பிக்கை, விஸ்வாசம், ஆக்கப்பூர்வமான பின்னூட்ட கலாசாரத்துடன் தலைமைத்துவம் மற்றும் நம் ஒப்புக்கொண்ட இலக்குகளு-க்கு ஏற்ற பணி கலாசாரம் ஆகியவேயே நம் பணியின் மூலக்கூறுகள்.

### மரியாதை

நாம் உண்மையாகவும், வெளிப்ப-டையாகவும் இருப்போம்.

நாம் நம்பகமானவர்களாகவும், கடமைக்கு உண்மையானவர்க-ளாகவும் இருப்போம்.

திறந்த தகவல் தொடர்பு மற்றும் விமர்சக ரீதியிலான

பின்னூட்டத்தை செயல்படுத்தும் பணிச்சூழலை உருவாக்குகிறோம்.

## ஆக்கப்பூர்வமான பின்னூட்ட கலாசாரம்

- தற்போதைய வழக்கங்களை மறுஆய்வு செய்வது, புதிய அணுகுமுறைகளை நாடுவது மற்றும் நம் சொந்த நடத்தையை பிரதிபலிப்பதன் மூலம் ஆக்கப்பூர்வமான பின்னூட்ட கலாசாரத்தை உருவாக்குகிறோம்.
- தவறுகளை, முன்னேற்றத்திற்கான வாய்ப்பாக பயன்படுத்துகிறோம்.
- மக்களின் மனங்களும், சிந்தனைகளும் மாற்றத்துக்கு உட்பட்டது என்பதை ஏற்றுக் கொள்கிறோம்.
- கருத்து மோதல்களை நிர்வகித்து அதற்கு தீர்வு காண்கிறோம்.
- DW பிரதிநிதிகள், மேலாளர்கள் மற்றும் ஊழியர்கள் குறித்து தவறான தகவல்களை பரப்ப மாட்டோம்.

## விஸ்வாசம்

- DWவின் மதிப்புகள் மற்றும் உத்திகளை நிலைநிறுத்துவோம்.
- மாற்றத்திற்கான செயல்பாடுகளில் தீவிரமாக பங்கேற்போம்.
- நேர்மை மற்றும் நாணயத்துடன் நடந்துகொள்ள கடமைப்பட்டுள்ளோம்.

## இலக்கை நோக்கி செயல்படுவது

- DWவின் இலக்குகளை அடைய தன்னிச்சையாக பணிபுரிவோம்.
- புதுமைகளை ஊக்குவிக்க புதிய சிந்தனைகளை பயன்படுத்துவோம்.
- வெற்றியை நோக்கி செயல்படுவோம்.



# கூட்டாளிகள் மற்றும் மூன்றாம் தரப்பு நபர்களுடனான தொடர்பு

### அறிவுசார் சொத்து

மூன்றாம் தரப்பினரின் அறிவுசார் சொத்துகளை சட்டப்படி மதித்து பாதுகாப்போம்.

### முரண்பாடுகள்

நாம் எடுக்கும் வணிக முடிவுகள் DWவின் நலனை சார்ந்திருக்கும். தனிப்பட்ட நபர்களின் ஆர்வங்கள் மற்றும் தொடர்புகளால் இது பாதிக்கப்படக்கூடாது.

சாத்தியமான முரண்பாடுகளை வெளிப்படையாக பேசுவோம்.

நம் தொழில் மற்றும் நம் கூட்டாளிகள் இடையே முரண்பாடுகள் இல்லாமல் இருப்பதை உறுதி செய்வோம்.

### ஊழல் மற்றும் பிறருக்கு பலன்களை வழங்குவது

எந்த விதமான ஊழல் செயல்பாடுகளையும் நாம் முற்றிலும் நிராகரிக்கிறோம்.

பிறருக்கு சாதகமாக செயல்படுவது, லஞ்சம் வழங்குவது அல்லது தனிப்பட்ட விதத்தில் பணம் கொடுப்பது ஆகியவற்றுக்கு தடை செய்யப்பட்டுள்ளது.

### வணிக கூட்டாளிகள்

DWவின் மதிப்புகளை பயன்படுத்தியே வணிக கூட்டாளிகளை தேர்ந்தெடுக்கிறோம்.

> “DWவின் நலனை சார்ந்து நாங்கள் எங்களுடைய வணிக முடிவுகளை எடுக்கிறோம்.

### பரிசுகள் மற்றும் உதவித் தொகைகள்

நம் தன்னிச்சையான செயல்பாடுகளை கேள்விக்கு உள்ளாக்கும் பரிசுகள், அழைப்புகள் மற்றும் (பத்திரிகையாளர்களுக்கான) தள்ளுபடிகளை தவிர்க்கிறோம். இவை நம் வணிக முடிவுகளை பாதிக்கும் வகையில் அமையப் பெறலாம்.

அனைத்து சட்டங்கள் மற்றும் உள் விதிமுறைகளுக்கு உட்பட்டு, முற்றிலும் வெளிப்படைத்தன்மை கொண்ட பிற பரிசுகள், மற்றும் பலன்களை மட்டுமே பெற அனுமதி இருக்கிறது.

நியாயமான வரம்புகளுக்கு உட்பட்டு மட்டுமே நாம் பரிசுகள் மற்றும் அழைப்பிதழ்களை வழங்குகிறோம். இந்த வரம்புகள் என்பது ஜெர்மனி மற்றும் அந்தந்த நாடுகளின் கண்ணோட்டத்திற்கு உட்பட்டது.

### கொள்முதல் மற்றும் ஒப்பந்தப்புள்ளி

சட்டங்கள் மற்றும் உள் விதிமுறைகளுக்கு உட்பட்டு தரம், பொருளாதாரம் மற்றும் போட்டிகளின் அடிப்படையிலையே நாம் பொருட்கள், சேவைகள் மற்றும் தயாரிப்புகளை பெறுகிறோம். விநியோகஸ்தர்களின் சரிபார்க்கப்பட்ட தயாரிப்புகள் மற்றும் சேவைகளின் தரத்தை வைத்தே கொள்முதல் முடிவுகள் எடுக்கப்படும். போட்டிக்கு தீங்கு விளைவிக்கும் ஒப்பந்தங்கள் அனுமதிக்கப்பட மாட்டாது.

# தகவல்களை கையாளும் விதம்

**ரகசியத்தன்மை**

தொழில் ரகசியங்கள் மற்றும் முக்கிய தகவல்களை பாதுகாப்பாக கையாள்வோம். இது பத்திரிகை செய்திகள் உள்ளிட்ட வெளியில் சொல்லக்கூடாத பிற தகவல்களுக்கும் பொருந்தும்.

காக்கப்பட வேண்டிய தகவல்கள் டிஜிட்டல் தளத்தில் இருந்தாலும், அதை தேவையான ஊழியர்கள் மட்டுமே அணுக முடியும்படி செய்கிறோம்.



## தரவு பாதுகாப்பு

தேவையான தகவல்களை மட்டுமே நாம் சேகரிக்கிறோம்.

தரவுகள் தவறான முறையில் பயன்படுத்தப்படாமல் இருக்க, சட்டப்படி அனுமதிக்கப்பட்ட தரவு சேகரிப்பு, பயன்பாடு மற்றும் செயல்படுத்துதல் முற்றிலும் ரகசியமாக இருப்பதை உறுதி செய்கிறோம்.

தரவுகளை எங்கு சேமிக்க போகிறோம் என்பதையும் மற்றும் அதை குறியாக்கம் செய்யப் போகிறோமா என்ற முடிவு எடுக்கப்படும்போதும், அதன் ரகசியத்தன்மைக்கு முக்கியத்துவம் அளிக்கப்படும்.

## ஐடி மற்றும் தகவல் பாதுகாப்பு

ஐடி அமைப்புகளுடன் பணிபுரியும்போது, நிறுவனத்தின் உள்ளேயும் வெளியேயும் அவை தவறாக பயன்படுத்தப்படுவதை தடுக்க, ஐடி மற்றும் தகவல் பாதுகாப்பு விதிமுறைகளை நாம் பின்பற்றுகிறோம்.

ஐடி அமைப்புகளை அஜாக்கிரதையாக பயன்படுத்துவது DWவின் தகவல் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக இருக்கலாம் என்பதை அறிந்துள்ளோம்.



**“நாங்கள் தரவுகளை கவனமாக கையாளுகிறோம்.**

# பொதுவெளியுடன் நாம் வைத்திருக்கும் தொடர்புகள்





> **“நாங்கள் தனி நபர்களாக செயல்படுகிறோமா அல்லது DW ஊழியர்களாக செயல்படுகிறோமா என்பதை தெளிவுபடுத்துகிறோம்.**


பிற பத்திரிகையாளர்கள் மற்றும் ஊடக நிறுவனங்களில் இருந்து வரும் கேள்விகளை நாம் தன்னிச்சையாக பதில் அளிக்காமல், DW நிறுவனத்திற்கு வரும் கேள்வியாக எண்ணி அதனை கார்ப்ரேட் தொடர்பு துறைக்கு அனுப்ப வேண்டும். அவர்கள் அதனை ஒருங்கிணைத்து தகவல்களை அளிப்பார்கள்.

அனைத்து தொடர்புகளிலும், தனி நபரிடம் இருந்து வரும் பதிலா அல்லது DW ஊழியர்களாக வழங்கும் பதிலா என்பதை தெளிவுபடுத்துகிறோம்.


கருத்து மோதல்களை தவிர்க்க, நம் உள் ஒப்புதல் நடைமுறைக்குள் சாத்தியமான விளம்பர விளைவை ஏற்படுத்தக்கூடிய வெளிப்புற நடவடிக்கைகளில் மட்டுமே நாம் ஈடுபடுவோம்.

# பாதுகாப்பு மற்றும் நிலைத்தன்மை தரநிலைகள்

“நிலையான முறையில் செயல்படுகிறோம்



- தொழில்சார் பாதுகாப்பு மற்றும் நலனிற்கான விதிமுறைகளை பின்பற்றுகிறோம்.
- நெருக்கடி நிலவும் பகுதிகளுக்கு பத்திரிகையாளர்களை அனுப்புவதற்கான விதிமுறை-களை பின்பற்றுகிறோம்.
- இருக்கும் வளங்களை பயன்படு-த்தி, சுற்றுச்சூழலுக்கு கேடு விளைவிக்காத மற்றும் பொரு-ளாதாரத்தை கருத்தில் கொண்டும், மறுசுழற்சியை உறுதிபடுத்தும் வகையிலும் நிலைத்தன்மையை மனதில் வைத்து நாம் செயல்படுகிறோம்.
- நம் செயல்பாடுகள் பிற கூட்டாளி-களுக்கு தேவையற்ற எதிர்ம-றை விளைவுகளை ஏற்படுத்தா-து என்பதை உறுதி செய்கிறோம்.




# நிறுவன சொத்துகளை கையாள்வது

பணிக்கான உபகரணங்கள் மற்றும் பிற DW சொத்துகளை உரிய கவனத்துடன் கையா-ள்வோம்.

நம் பணியின் முடிவுகள் DWவிற்கு கிடைக்கும்படி செய்வோம்.

வேலைக்கான உபகரணங்கள் திறனுடன் பயன்படுத்தப்படுகி-றதா என்பதை கவனிக்கிறோம்.



“செயல்திறன் மற்றும் பொரு-ளாதாரத்தில் நாங்கள் கவனமாக இருக்கிறோம்.


DW
Made for minds.

# நம் பத்திரிகை கொள்கைகள் மற்றும் தரநிலைகள்

- பொதுமக்களின் கருத்துகள் மீது செல்வாக்கு செலுத்துபவர்கள் என்ற முறையில் அதற்கேற்பு நம் பொறுப்பு என்ன என்பதை உணர்ந்து செயல்படுவோம்.
- DW சட்டம் மற்றும் நடத்தை விதிகளை பின்பற்றி நம் கடமைகளை செய்வோம்.
- மூன்றாம் தரப்பினரின் நலன்களால் பாதிக்கப்படாது, தலையங்க மற்றம் பத்திரிகை ரீதியாக தன்னிச்சையாக செயல்படுவோம்.
- கருத்து வேறுபாடுகளுக்கு மதிப்பளித்து, பன்முகத்தன்மை மற்றும் மாறுபட்ட பார்வைகள் மற்றும் உரையாடல்களை ஊக்குவிக்கிறோம்.
- முழுமையாக ஆராய்ந்து, தகவல் மற்றும் சமநிலையுடன் செய்தி வழங்கும் பத்திரிகையாளர்களுக்கான கொள்கைகளை நாம் கடைபிடிக்கிறோம்.
- பத்திரிகை செய்திகள் மற்றும் விளம்பரங்கள் இரண்டையும் தனித்தனியே நிர்வகிக்கும் விதிகளை கடைபிடிக்கிறோம்.
- தகவல்கள், கருத்துகள் மற்றும் படங்களை முறையாக கையாள்வது மற்றும் தனியுரிமையை மதிக்கவும் நாம் கடமைப்பட்டுள்ளோம்.
- DWவின் சமூக ஊடக விதிமுறைகள் மற்றும் தலைமை ஆசிரியரின் பத்திரிகை வழிகாட்டுதல்களை மதித்து செயல்படுகிறோம்.





“ நாங்கள் ஊடக
தர்மத்தை
விடாமுயற்சியுடன்
கடைபிடிக்கிறோம்.

# நடத்தை விதிகளை அமல்படுத்தும் நடைமுறைகள்

## DW நடத்தை விதிகளை மீறினால் ஏற்படும் விளைவுகள்

நடத்தை விதிமுறைகளை மீறினால், அதனை தெளிவுபடுத்தவும், எதிர்காலத்தில் இது போன்று மீண்டும் நிகழாமல் இருப்பதற்காகவும் தக்க நடவடிக்கைகளை DW எடுக்கும். முதலில் அது தொடர்பாக ஊழியரிடம் ஆலோசிக்கப்பட்டு, நடத்தை விதிகளை பின்பற்றுவதன் முக்கியத்துவம் குறித்து கூறப்படும். இது அவர் எந்த நடத்தையை மீறினார் என்பதை பொறுத்து, அவரின் செயல்பாடுகளில் மாற்றத்தை உண்டாக்கும் நோக்கில் இருக்கும். தொழிலாளர் சட்டப்படி, விதிமுறை மீறலின் அளவு என்ன என்பது வரையறுக்கப்படும். தேவைப்பட்டால் பணி நீக்கம் செய்யப்படவோ அல்லது அந்த நபருடன் நிறுவனத்திற்கு இருக்கும் தொடர்பை நிறுத்திக்கொள்ளவோ வாய்ப்பு இருக்கிறது.

## நடத்தை விதிகளை நீங்கள் பின்பற்ற கீழ்வரும் கேள்விகள் உங்களுக்கு உதவியாக இருக்கும்

- உரிய சட்ட மற்றும் நிறுவன விதிமுறைகளை நான் கடைபிடிக்கிறேனா?
- நான் ஒரு முடிவை எடுக்கும் முன் தகுந்த நேரத்தில், அதில் ஈடுபட்ட பிற தரப்பினருடன் கலந்து ஆலோசித்தேனா?
- என் தனிப்பட்ட ஆர்வங்களை ஒதுக்கி வைத்து, DWவின் நலனை மட்டுமே கருத்தில் கொண்டு என் முடிவை எடுக்கிறேனா?
- என் முடிவால் வெளியில் ஏற்படக்கூடும் தாக்கம் என்ன? மூன்றாம் தரப்பினர் மதிப்பீட்டின்போது என் முடிவு நிற்குமா? DWவின் நற்பெயருக்கு கலங்கம் ஏற்படாத வகையில் இருக்குமா?
- என் சொந்த மனசாட்சிக்கு என் முடிவு ஒத்துப்போகிறதா?

**இதற்கெல்லாம் உங்கள் பதில் “ஆம்” என்றால், உங்கள் முடிவு நடத்தை விதிகளுடன் ஒத்துப்போகிறது என்று அர்த்தம். இல்லை என்றால், உங்கள் சந்தேகங்களுடன் கீழ்வரும் நபர்களை நீங்கள் அணுகலாம்.**

# உங்கள் கேள்விகளுடன் நீங்கள் அணுக வேண்டியவர்கள்



**உங்கள் முடிவில் சந்தேகம் இருந்தால், அல்லது நடத்தை விதிகளை பின்பற்றுவது குறித்த கேள்விகள் இருந்தால், உங்கள் மூத்த நிர்வாகி அல்லது இணக்க அதிகாரியை தொடர்பு கொள்ளுங்கள்.**



### விதிமீறல்கள் நிகழும் பட்சத்தில் நீங்கள் தொடர்புகொள்ள வேண்டியவர்கள்

DW ஊழியர்கள் அனைவருக்குமே நடத்தை விதிகள் பொருந்தும்.

நிறுவனத்தில் நீங்கள் ஏதேனும் விதிமீறல்கள் சாத்தியத்தை கவனித்தால், ஒருவரின் நடத்தை சரியில்லை என்று கவனித்தால், முதலில் நேரடியாக அந்த நபரிடமே இதை கொண்டு செல்வது முக்கியம். நீங்களே விதிமுறைகளை மீறியிருக்கிறீர்கள் என்று நினைத்தால் எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

எந்த வகை விதிமீறல் என்பதை பொறுத்து, அதனை உங்கள் மேலாளரிடமோ அல்லது இணக்க அதிகாரி ஆனெலி க்ரோயெனிகெரிடமோ தெரிவிக்கலாம்.

compliance@dw.com
+49.228.429-2105

இதற்கு தொடர்புடைய பிற நபர்களையும் நிச்சயம் நீங்கள் தொடர்பு கொள்ளலாம், குறிப்பிட்ட ஊழியர் பிரதிநிதி அல்லது தேவைப்பட்டால் ஊழல் அதிகாரி அல்லது பாலியல் துன்புறுத்தலுக்கு பொறுப்பான நபர்களை தொடர்பு கொள்ளுங்கள்.

எந்த பட்சத்திலும், உங்கள் புகாரின் ரகசியத்தன்மை முற்றிலும் பாதுகாக்கப்படும்.

### விதிமீறல்கள் நடக்கும் பட்சத்தில் DW எடுக்கும் நடவடிக்கைகள்

விதிமீறல்கள் நடக்கும் பட்சத்தில், அதனை தெளிவுபடுத்த தக்க நடவடிக்கைகளை DW எடுக்கும். குறிப்பிட்ட ஊழியருடன் கலந்து ஆலோசித்து, நடத்தை விதிகளின் முக்கியத்துவத்தை விளக்கி, அவரின் நடத்தையில் மாற்றத்தை கொண்டு வரும் நோக்கில் நடவடிக்கைகள் எடுக்கப்படும். எனினும், உரிய விதிமுறைகள் மற்றும் தொழிலாளர் சட்டத்தின் கீழும் சில விதிமீறல்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கும் சாத்தியமும் உள்ளது.

நவம்பர் 2022 நிலவரப்படி | © DW